Akhbar : Malaysia Nanban
Tarikh : 19 Julai 2020
Muka surat : 13

# தேசிய கோட்பாடு நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுகிறது




ஜார்ஜ்டவுன், ஜூலை 19-

நாட்டின் பாதுகாப்பு மற்றும் ஒற்றுமையின் சின்னமாக தேசிய கோட்பாடுகள் இருந்துவருவதாக கெராக்கான் கட்சியின் தேசிய ஒருமைப் பாட்டு பிரிவின் தலைவர் புவநீதன் இளங்கோவன் தெரிவித்திருக் கிறார்.

தேசிய கோட்பாடு அமல்படுத்தப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், அவை நாட்டின் முன்னேற்றத்திற்கும் மேம்பாட்டிற்கும் தூண்களாக இருந்து வருவதாகவும் நாட்டு மக்களிடையே ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் நிலைநாட்டுகிறது என்றும் அவர் கூறினார்.

ஒற்றுமையாக இருந்து கலை கலாச்சாரத்துடன் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வு அடிப்படையில் நாட்டை வளர்ச்சி அடையச் செய்து வருகின்றனர்.

1969ஆம் ஆண்டு மே 13ஆம் தேதி கசப்பான நினைவுகளுக்கு பின்னரே மலேசியாவில் இந்தக் கோட்பாடுகள் அறிமுகம் செய்யப்பட்டதாகவும் இளம் தலைமுறையினர் தேசிய கோட்பாட்டின் மகத்துவங் களை அறிந்திருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய கோட்பாட்டிலுள்ள ஐந்து வரிகளும் மிகவும் தெளிவான முறையிலும் இனம் மதம்என்றுபாரபட்சம்பார்க்காமல் சிறப்பாக் எழுதப்பட்டுள்ளது.

தலை சிறந்த குடிமகனாக எழுவதற்கு தேசிய கோட்பாடுகளும் நன்னெறி பண்புகள்மிகவும்அவசியமாகும். தேசிய கோட்பாட்டின் அவசியத்தை பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்று புவநீதன் இளங்கோவன் வலியுறுத்தியிருக்கிறார்.

-பெர்னாமா

Malaysia Nanban, Pg 13, 19/7/2020

Tajuk : **Rukun Negara memainkan peranan penting dalam pembangunan negara**

Ringkasan : Ketua Unit Integrasi Nasional Parti Gerakan, Puvanithan Elangovan, berkata Rukun Negara merupakan lambang keselamatan dan perpaduan negara. Rukun Negara bukan sahaja menjadi tulang belakang bagi pembangunan negara sejak 50 tahun, malah ia juga memainkan peranan untuk menyemaikan perpaduan dan pendamaian dalam kalangan masyarakat. Beliau juga mengatakan bahawa Rukun Negara telah diperkenalkan selepas insiden pahit yang berlaku pada 13 Mei 1969, jadi setiap rakyat perlu mengetahui keagungan Rukun Negara dan ibu bapa juga perlu mendidik tentang inti patinya kepada anak-anak.